1994 மார்ச் 22]

75—

ஐந்து கிலோமீட்டர் இடைவெளிக்குள் அரசுத் தேர்வு மையங்களை அமைத்தல்

21266—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 தேர்வு மையங்கள் 5 கி.மீ. இடைவெளிக்குள் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் ஒரு இடத்தில்கூட பிளஸ் 2 தேர்வு மையம் இல்லை என்ற குறையை நீக்கி தாயுள்ளத்தோடு தெய்வீக அருளோடு இந்த ஆண்டு பேரணாம்பட்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிளஸ் 2 தேர்வு மையம் ஏற்படுத்தியும், கிராமப்புற மாணவ, மாணவியர் முன்னேற மேல்பட்டி பள்ளிக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையம் அமைத்தும் மாணவ, மாணவியர்களை காப்பாற்றியும், காப்பாற்ற வேண்டிய நேரத்தில் மக்களைக் காத்தும், அதர்மம் செய்யும் விசுவாசம் இல்லாத விசுவநாதர்களை சூர சம்ஹாரம் செய்தும், விஷப்பல்லை அகற்றியும், தமிழ் மக்களைக் காக்கும் கடவுள் டாக்டர் புரட்சித் தெய்வத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவ, மாணவியர்கள் தாங்கள் படித்துப் பழகிய சொந்தப் பள்ளியை விட்டு, ஊரை விட்டு பஸ்ஸில், தேர்வு சமயத்தில் பயணம் செய்து, புதிய இடத்தில், புதிய சூழலில், பரிட்சை பயத்துடன், எக்சாம் பியருடன், தேர்வு எழுத வேண்டியிருப்பதால் கிராமப்புற மாணவர்கள் குறிப்பாக பல மாணவியர்கள் தேர்வில் தோல்வி அடைகிறார்கள். தோல்வி அடைந்தவர்களில் பல பெண்கள் மீண்டும் தேர்வு எழுத முன்வருவதில்லை. மாணவிகள் பாஸ் ஆனால் காலேஜ்; பெயில் ஆனால் மேரேஜ் என்ற வாழ்க்கைத் தடை, வாழ்வில் முன்னேற வேண்டிய பெண்களுக்கு ஏற்படுகிறது. பெண்கள் முன்னேற அரசு தொட்டில் போடும் டாக்டர் புரட்சித் தலைவி, பெண்கள் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற முன்னோடி முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி, அன்னை தெரசாவால் போற்றப்பட்ட, வரலாறு காணாத அளவில் நிறைய பெண் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச்

செல்ல புரட்சி செய்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) 5 கிலோ மீட்டருக்குள் ஒரு ஊரில் தேர்வு மையம் இல்லாமல் இருந்தால் பெண்கள் பள்ளிக்கு முன்னுரிமை தந்து எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 தேர்வு மையம் அமைத்து மாணவியர்களுக்கு உதவிட புரட்சித் தெய்வத்தினுடைய அரசு கருணையோடு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ் 2 தேர்வுக்கு புதிதாக ஒரு தேர்வு மையம் அமைக்கவேண்டுமென்றால் ஆண்கள் பள்ளியாக இருந்தால் 150 மாணவர்களும், பெண்கள் பள்ளியானால் 75 மாணவிகளும் பயில வேண்டும் என்ற விதிமுறையிருக்கிறது. அதைப்போலவே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு புதிய தேர்வு மையம் அமைக்கவேண்டுமானால் ஆண்கள் பள்ளியானால் 100 மாணவர்களும், பெண்கள் பள்ளியானால் 75 மாணவிகளும் இருக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. இதைத் தவிர போக்குவரத்து வசதி, பள்ளிகளில் இட வசதி, தளவாட வசதி, துறையின் நிதி வசதி ஆகியவை பரிசீலிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் தேர்வு மையங்கள் அனுமதிக்கப்படும்போது அவை 5 கிலோ மீட்டர் இடைவெளிக்குள் அமைக்கப்படவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் 5 கிலோ மீட்டர் இடைவெளிக்குள் மட்டுமே அமைக்கப்படவேண்டும் என்ற திட்டம் எதுவும் தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரது கருத்தை ஏற்று, ஒரு தேர்வு மையத்திற்கு ரூபாய் 6 ஆயிரம் அரசுக்கு செலவு. . . (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11..00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேர்வு மையம் புதிதாக அமைப்பதற்கு ரூபாய் 6 ஆயிரம் செலவினம் ஏற்படுகிறது என்றாலும், தேவையின் அடிப்படையில் இதுகுறித்து பரிசீலித்து மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சி தெய்வம் அரசு ஆண்டுக்காண்டு நிறைய புதிய பள்ளிகளைத் துவக்கி கல்வியில், அறியாமையை ஒழிப்பதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் தமிழகம் இன்று உள்ளது. முதல் இடத்தில் கல்வியில் வருவதற்காகவும், புதிய, பழைய பள்ளிகளின் விகிதத்திற்கு ஏற்ப ஆண்டுக்காண்டு கூடுதலாக எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2

1994 மார்ச் 22]

தேர்வு மையம் அமைக்கவும், தேர்வு மையம் அமைக்க நிதிநிலை காரணம் என்றால், புதிய பள்ளிகளைத் துவக்க ஒரு குறிப்பிட்ட தொகையைக்கட்டி துவக்குவதுபோல, சுமார் ரூபாய் 5 ஆயிரம் அளவில் அரசுக்கு நன்கொடை செலுத்தினால், குறிப்பிட்ட கால நிர்ணயத்தில் எல்லா ஊர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி.-க்கும் பிளஸ் 2-க்கும் தேர்வு மையம் 5 கிலோ மீட்டருக்குள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 50 புதிய தேர்வு மையங்கள் என்ற அடிப்படையிலே இப்போது அனுமதிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு அது ஏற்புடையது என்று குழு ஒப்புதல் தருமாயின் அதுபற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. எஸ். ஆண்டித்தேவர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

76—

டி. குண்ணத்தூரில் உள்ள ஊருணியில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

***17172**—திரு. எஸ். ஆண்டித் தேவர்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி .குண்ணத்தூர் கிராமத்தில் பேருந்து நிற்குமிடத்திலுள்ள ஊருணியைச் சுற்றி கடைகள் மற்றும் குடிசைகள் உள்ளதால் அவற்றின் கழிவு நீர் ஊருணியில் கலந்து கேடு விளைவிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை அப்புறப்படுத்தி ஊருணியைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி.குண்ணத்தூர் கிராமத்தில் பேருந்து நிற்குமிடத்திலுள்ள ஊருணியில் கழிவுநீர் கலக்கவில்லை, அவ்வாறு கலக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி.குண்ணத்தூர், 3 ஆயிரம், 4 ஆயிரம் ஜனத்தொகை உள்ள ஒரு பெரிய கிராமமாகும். அந்த கிராம மக்கள் அனைவருமே அந்த ஊருணியின் மத்தியிலுள்ள ஒரு

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS